<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 56/2017 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | முருகவேல் | நாள் | 14.08.2024 |
| தகப்பனார் பெயர் | சின்னதம்பி | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

6) 2009ம் வருடத்திலேயே 1ம் பிரதிவாதி மற்றும் அமுதா, சகுந்தலா ஆகியோர்கள் பெயரில் தாவா சொத்திற்குரிய பட்டாக்கள் மாற்றப்பட்டுள்ள நிலையில், கடந்த 2017ம் வருடம் வரை மேற்படி பட்டாக்களை ரத்து செய்யக்கோரி வாதி ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால், ரத்து செய்யக்கோரி மனு அளித்தார். அவ்வாறு ரத்து செய்யக்கோரி மனு அளித்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியும். எனக்கு வாதி மேற்படி பட்டாக்களை ரத்து செய்ய மனு அளித்த விவரம் நேரடியாக தெரியும் என நான் சொல்லும் நிலையில், தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணம் தான் மேற்படி ரத்து செய்யக்கோரி வாதி அனுப்பிய மனுவா என்றால், இல்லை. மேற்படி மனு பட்டா வழங்கக்கூடாது என கொடுத்த மனு. மேற்படி வா.சா.ஆ.9 பற்றியும் எனக்கு நேரடியாக தெரியும்.

7) மேற்படி வா.சா.ஆ.9 ஆவணத்தில் வாதியின் கையெழுத்து உள்ளதா என்றால், அவரது கையெழுத்து இல்லை. அவரது சகோதரரின் கையெழுத்துதான் உள்ளது. மேற்படி மனு வாதி பரிகாரம் கோருவது போல் எழுதப்பட்டு, அதில் வாதியின் சகோதரர் கையெழுத்திட்டுள்ளார் என்றால், சரிதான். மேற்படி மனுவை வருவாய் துறையினர் பெற்றுக்கொண்டனரா என்பதற்கு எவ்வித ஒப்புகை அட்டையும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரிதான். மேற்படி வாதியின் சகோதரர் கோவிந்தராஜ் மேட்டூர் நகராட்சியில் பணிபுரிந்தார் என்றால், சரிதான். ஆனால் வா.சா.ஆ.9 மனுவில் கண்டுள்ள தேதியில் அவர் மேட்டூர் நகராட்சியில் பணியில் இல்லை. கோவிந்தராஜ் எப்போது மேட்டூர் நகராட்சியில் பணியில் சேர்ந்தார் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. 2008ம் வருடம் மேற்படி கோவிந்தராஜ் எங்கு பணிபுரிந்தார் என்ற

விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.9 ஆவணம் வாதியால் இவ்வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால், சரியல்ல.

8) அவ்வாறு மேற்படி சகுந்தலா மற்றும் அமுதா ஆகியோர் பெயரில் தாவா சொத்திற்குரிய பட்டாக்கள் மாற்றப்பட்டுள்ள விவரங்கள் வாதிக்கு முன்னரே தெரிந்தும், தாவா சொத்தின் பேரிலான தனது உரிமையை விளம்ப கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் தற்போது வரை மேற்படி நபர்களை தரப்பினர்களாக சேர்த்தவில்லை என்றால், சரிதான்.

9) லட்சுமண கவுண்டர் குடியிருந்ததாக சொல்லும் வீடு பராமரிப்பின்றி இடிந்துவிட்டதால், மேற்படி வீடு அமைந்துள்ள இடம் நத்தம் என வகைபாடு செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி மற்றும் அமுதா, சகுந்தலா ஆகியோர் பெயரில் பட்டா வழங்கப்பட்டு, மேற்படி நபர்கள் தான் தாவா சொத்தில் வசித்து வருகிறார்கள் என்றாலும், ஒருபோதும் வாதி மேற்படி சொத்தில் வசிக்கவில்லை என்றாலும், சரியல்ல.

10) வாதி தன் வழக்கில் எந்த கதவு எண்ணை காண்பித்துள்ளார் என்றால், க.எண்.6–20–A1 ஐ காண்பித்துள்ளார். நான் சொல்வது போல் கதவு எண் கொண்ட ஒரு வீடே அங்கு இல்லை என்றாலும், தற்போது தாவா சொத்திலுள்ள வீடுகளில் சகுந்தலா, அமுதா மற்றும் 1ம் பிரதிவாதி உஷாராணி பெயரில் நான்கு வீடுகள் உள்ளது என்றால், சரியல்ல. 28.03.2008ம் தேதியிலேயே நகராட்சியால் தீர்மான எண்.106 மேற்படி நபர்கள் மீது வரிவிதிப்பு செய்யப்பட்டு, அவர்கள் தான் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால், சரியல்ல.

11) உண்மையில் வாதி சேலத்தில் வசித்து வருகிறார் என்றாலும், தற்போதுள்ள நிலையில் தாவா சொத்தில் என்ன உள்ளது என்றே வாதிக்கு தெரியாது என்றாலும், நான் வாதியின் உறவினர் என்பதால், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அதனால்தான்

வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் மறுத்த சங்கதிகளை என் முதல் விசாரணை பிரமாண பத்திரம் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர் என்றால், சரியல்ல.

12) ஆரம்பத்தில் 1ம் பிரதிவாதியின் கணவர் காமேஸ்வரன் என்பவரது பெயரில் தாவா சொத்திற்கான வரிவிதிப்பு செய்யப்பட்டு, பின்னிட்டு 1ம் பிரதிவாதியின் பெயருக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில், மேற்படி சங்கதிகள் குறித்து தெரியாமல், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தற்போது வாதி சேலத்தில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். எத்தனை வருடங்களாக வாதி சேலத்தில் வசித்து வருகிறார் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

13) கடந்த 2017ம் வருடத்தில் வாதி தாவா சொத்தை அபகரிக்க முயற்சித்ததை 1ம் பிரதிவாதி தடுத்துவிட்டதால், பழைய ஆவணங்களை கொண்டு வாதி தவறாக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

(2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.